பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

29 07 2026 WEDNESDAY 7 15 PM

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வந்தேமாதரம் தேசியப் பாடலுக்கு ஜனகனமன தேசிய கீதத்திற்கு இணையான சட்டப்பூர்வ பாதுகாப்பை அளிக்க வகை செய்யும் மசோதா இன்று மாநிலங்களவையில் நிறைவேறியது.

2. தேர்வு முறைகேடுகள் தடுப்பு சட்டத்திருத்தம், குற்றவாளிகளுக்கு 10 ஆண்டுகள் சிறை மற்றும் அபராதம் விதிக்க வகை செய்வதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திரசிங் கூறியுள்ளார்.

3. மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால், மின்னணு தொழில்நுட்பத்துறையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

4. அமர்நாத் யாத்திரையின் முக்கிய நிகழ்வாக, ஸ்ரீநகரிலிருந்து Charri Mubarak புனித செங்கோல் இன்று எடுத்துச் செல்லப்பட்டது.

5. காமன்வெல்த் விளையாட்டு போட்டிகளின் பாரா நீச்சல் பிரிவில் இந்தியாவின் Kulkarni மற்றும் Suyash இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

>>>>>><<<<<

வந்தேமாதரம் தேசியப் பாடலுக்கு ஜனகனமன தேசிய கீதத்திற்கு இணையான சட்டப்பூர்வ பாதுகாப்பை அளிக்க வகை செய்யும் மசோதா இன்று மாநிலங்களவையில் நிறைவேறியது.

1971ஆம் ஆண்டு தேசிய கௌரவ அடையாளங்கள் மீதான அவமதிப்பை தடுப்பதற்காக கொண்டு வரப்பட்ட சட்டத்தில் தற்போது திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு, நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டுள்ள இந்த மசோதா, வந்தேமாதரம் பாடலுக்கு அவமதிப்பை ஏற்படுத்துவோருக்கு தற்போதுள்ள சட்டத்தின் படி, 3 ஆண்டுகால சிறை தண்டனை மற்றும் அபராதம் விதிக்க வகை செய்கிறது.

இந்த மசோதா மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய உள்துறை இணையமைச்சர் திரு. நித்யானந்த் ராய், தற்போது கொண்டுவரப்பட்டுள்ள சட்டத்திருத்த மசோதா, சட்டப்பூர்வமான மாற்றத்திற்கு மட்டுமல்ல என்றும், நாட்டின் ஆன்மாவையும், கலாச்சார கௌரவத்தையும், சுதந்திரப் போராட்ட அடையாள சின்னமாக திகழ்ந்த வந்தேமாதரம் பாடலுக்கு உரிய மதிப்பை அளிப்பதற்கும் வகை செய்வதாக தெரிவித்தார்.

1875ஆம் ஆண்டு Bankim Chandra Chattopadhyay இயற்றிய இந்த பாடல், சுதந்திரப் போராட்ட இயக்கத்தில் முக்கியப் பங்காற்றியதாக அவர் கூறினார்.

1935ஆம் ஆண்டு காங்கிரஸ் தலைவராக இருந்த ஜவஹர்லால் நேரு, வந்தேமாதரம் பாடலை இரண்டு சரணங்களாக சுருக்கியதாக அவர் தெரிவித்தார்.

1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 - நாடு சுதந்திரம் பெற்ற நாளில் சர்தார் வல்லபபாய் பட்டேல், ஆகாஷ்வாணியில் வந்தேமாதரம் பாடலை ஒலிபரப்ப நடவடிக்கை எடுத்ததாக திரு. நித்யானந்த் ராய் குறிப்பிட்டார்.

முன்னதாக, இந்த சட்டத்திருத்த மசோதா மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய பிஜேபி உறுப்பினர் டாக்டர் ராதாமோகன்தாஸ் அகர்வால், நாட்டின் சுதந்திரப் போராட்ட காலத்தில் வந்தேமாதரம் பாடல், ஆங்கிலேயரின் அடக்குமுறைக்கு எதிராக, புரட்சியை ஏற்படுத்தியதாக கூறினார்.

YSR காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் திரு. பாபுராவ் பேசும்போது, நாட்டின் தேசியப் பாடலுக்கு உரிய மரியாதையை செலுத்த வேண்டும் என்ற உணர்வை நம் அனைவருக்கும் ஏற்படுத்தியுள்ளதாக கூறினார்.

அஇஅதிமுக உறுப்பினர் திரு. தம்பிதுரை, ஆம் ஆத்மி கட்சியின் திரு. சஞ்சய் சிங், பகுஜன் ஜனதா தள கட்சியின் திரு. ஜனதா தள கட்சியின் திரு. Sulata Deo ஆகியோரும், இம்மசோதா மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசினர்.

>>>>>><<<<<

தேர்வு முறைகேடுகளை தடுக்க வகை செய்யும் சட்டத்திருத்த மசோதா இன்று மக்களவையில் நிறைவேறியது.

இந்த மசோதா மீது நடைபெற்ற விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், தேர்வு முறைகேடு தொடர்பான குற்றங்களுக்கான தண்டனையை கடுமையாக்கவும், விரைந்து நீதி கிடைக்கவும் இந்த புதிய சட்டத்திருத்தம் வகை செய்வதாக கூறினார்.

முறைகேடுகளில் ஈடுபடுவோருக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனையும், 10 கோடி ரூபாய் வரை அபராதம் விதிப்பதற்கான அம்சங்கள் இதில் இடம்பெற்றுள்ளதாக டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

>>>>>><<<<<

மத்திய அரசு தொழில்துறையில் மேற்கொண்ட சீர்திருத்த நடவடிக்கைகளின் விளைவாக, மின்னணு தொழில்நுட்பத்துறையில் பெரிய அளவில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது என்று மத்திய மின்னணு தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் எழுத்துபூர்வமாக அவர் அளித்துள்ள பதிலில், மின்னணு பொருட்களை உருவாக்குவதிலும், உற்பத்தியிலும், உலகின் மையமாக இந்தியா முன்னேறி வருகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மின்னணு மேம்பாட்டிற்கான தனி நிதியம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், இதனால், மின்னணு பொருட்கள் கண்டுபிடிப்பிலும், உற்பத்தியிலும் பெரிய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஆராய்ச்சி மற்றும் உற்பத்திக்கு தேவையான உதவிகள் இந்த நிதியத்தின் மூலம் அளிக்கப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். புத்தாக்க தொழில்முனைவோர் மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில்நுட்பங்களை கொண்டு வரும் நிறுவனங்களுக்கு போதிய நிதியுதவி அளிக்கப்படுவதாகவம் அவர் கூறினார்.

இதற்கென, இந்தியப் பங்கு பரிவர்த்தனை வாரியத்தில் பதிவு செய்யப்பட்டு, நிதி திரட்டப்படுவதாகவும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

>>>>>><<<<<

போதைப்பொருள் இல்லாத வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க, இளைஞர்கள் தலைமையேற்று நடத்தும் 100 வார கால உறுதிமொழி இயக்கத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி, அடுத்த மாதம் 2ஆம் தேதி தொடங்கி வைக்கிறார்.

My Bharat இணையதளத்தில் போதைப்பொருள் ஒழிப்பு உறுதிமொழியை ஏற்பதற்கு இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் இந்த இயக்கத்தின் மூலம் ஏற்படுத்தப்படவுள்ளது.

நாடு முழுவதும் My Bharat தன்னார்வலர்கள், நாட்டுநலப் பணியினர், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் 125 ஆன்மீக அமைப்புகள் ஆகியவற்றை ஒன்றிணைத்து, மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகம் இந்த விழிப்புணர்வு இயக்கத்தை முன்நின்று நடத்துகிறது.

>>>>>><<<<<

நாட்டின் பாரம்பரிய ஓவியக் கலைஞர்கள் குழுவினர், இன்று குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்முவை சந்தித்தனர்.

குடியரசுத்தலைவர் மாளிகையில், நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்திருந்த பாரம்பரிய ஓவியர்கள், தங்களது படைப்புகளை குடியரசுத்தலைவரிடம் வழங்கி, வாழ்த்து பெற்றனர்.

பனாரஸ் மற்றும் கேரள ஓவியங்கள், Thangka, Nayaka, Surpur, Mysore ஆகியவற்றின் பாரம்பரிய ஓவியச் சின்னங்களை குடியரசுத் தலைவர் பார்வையிட்டார்.

நாட்டின் பாரம்பரிய கலாச்சார உயிரோவியச் சின்னங்களை எதிர்கால சந்ததியினருக்கும் கொண்டு செல்வதை ஊக்குவிக்கும் வகையில் இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

>>>>>><<<<<

நாட்டின் தடய அறிவியல் கட்டமைப்புகளை தொழில்நுட்ப ரீதியாக வலுப்படுத்துவதற்கு பல்வேறு திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக உள்துறை இணையமைச்சர் திரு. பண்டி சஞ்சய் குமார் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இன்று அவர் இன்று எழுத்துபூர்வமாக அளித்த பதிலில், நிர்பயா நிதி உட்பட 4 ஆயிரத்து 800 கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகை, தடய அறிவியல் துறையை மேம்படுத்துவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மரபணு சோதனை மற்றும் ஆராய்ச்சிப் பணிகளை மேம்படுத்த சண்டிகரில் மத்திய தடய அறிவியல் ஆய்வகம் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

நாடுமுழுவதும் உள்ள மத்திய தடய அறிவியல் ஆய்வகங்களில், நவீன கருவிகள் புதிதாக நிறுவப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

போதைப்பொருள் பயன்பாடு மற்றும் மனோ தத்துவம் தொடர்பான தடய ஆய்வுகளை மேம்படுத்துவதற்கான புதிய முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறினார். மின்னணு தடய அறிவியல் கட்டமைப்புகளும், மத்திய ஆய்வகங்களில் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் திரு. பண்டி சஞ்சய் குமார் தெரிவித்தார்.

>>>>>><<<<<

அமர்நாத் புனித யாத்திரையின் தொடக்கத்தை குறிக்கும் வகையில், குரு பௌர்ணமி தினமான இன்று, ஸ்ரீநகரிலிருந்து Charri Mubarak புனித செங்கோல் எடுத்துச் செல்லப்பட்டது.

மஹந்த் தீபேந்திரகிரி தலைமையில் அமர்நாத் புனித யாத்திரையின் பாரம்பரிய வழித்தடமான பஹல்காம், Sheshanag வழியாக Charri Mubarak கொண்டு செல்லப்படுகிறது. ரக்ஷா பந்தன் தினமான ஸ்ரவன பௌர்ணமி தினத்தன்று இந்த செங்கோல் அமர்நாத் கோவிலை சென்றடையும். அன்றைய தினம், Charri Mubarak-க்குடன் சிறப்பு பூஜைகள் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

காமன்வெல்த் விளையாட்டு போட்டிகளின் பாரா நீச்சல் பிரிவில் இந்தியாவின் Kulkarni மற்றும் Suyash இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

கிளாஸ்கோவில் நடைபெற்று வரும் இப்போட்டிகளின் தகுதிச் சுற்று ஆட்டங்களில், Kulkarni நான்காவது இடத்தையும், Suyash ஆறாவது இடத்தையும் பிடித்தனர்.

ஆடவர் குண்டு எறிதலில் Tajinderpal Singh Toor மற்றும் Samardeep இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளனர். மகளிர் குத்துச்சண்டை 51 கிலோ எடைப்பிரிவில் Sakshi Choudhary அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் 200 மீட்டர் ஓட்டப்பிரிவில் Animesh Kujur அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

>>>>>><<<<<

உலக கோப்பை பாரா துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியாவின் ராகுல் சர்மா தங்கப்பதக்கம் வென்றார்.

செர்பியாவின் Novi Sad-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 10 மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>>>><<<<<

Mifel ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Niki Kaliyanda Poonacha - ஈக்வெடாரின் Gonzalo Escobar இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மெக்ஸிகோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-3, 6-4 என்ற செட்கணக்கில் அமெரிக்காவின் ராஜீவ் ராம் – இங்கிலாந்தின் Joe Salisbury இணையை வென்றது.

>>>>>><<<<<

தைபே ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tanya Hemant காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 21-16, 14-21, 21-16 என்ற செட்கணக்கில் சீன தைபேயின் Wen Chi Hsu-வை வென்றார்.

இப்போட்டியின் இதர ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டங்களில் Tarun Mannepalli, Kiran George, Devika Sihag ஆகியோரும் வெற்றிபெற்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>>><<<<<

ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் பேட்டிங் பிரிவில், இந்தியாவின் Shubman Gill மீண்டும் முதலிடத்தை பிடித்துள்ளார்.

>>>>>><<<<<

ஜப்பானில் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டு போட்டிகளின் ஹாக்கி பிரிவில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>END<<<<<